[illegible]

[illegible] [illegible] 4. [illegible] 1937

7L
T15m211,N33
N37·5:4
190352

985

வருட சந்தா ரூ. 1—0—0 October 1937

27 FEB 1938

# ஆரம்பக்கல்வி

## ELEMENTARY EDUCATION




7L
T15 211,N33
N37. 5. 4
190352

"ஆரம்பக் கல்வி ஆபீஸ்"
94-95, புதுத்தெரு, மண்ணடி, மதராஸ்.

## என். முருகேச முதலியார் அண்ட் ஸன்

டிராயிங், கிராப் நோட்புக், அ கௌன்ட் புத்தகம் தயாரிப்பவர்கள்

54-55 பத்ரையன் தெரு; ஜி. டி. மதராஸ்.

பாடசாலைக்கு வேண்டிய கீழ் குறிப்பிட்டபடி 40, 60, 80, 120 க்கங்கள் கொண்ட,
எக்ஸைஸ் நோட் புத்தகங்கள் குரோஸ் கணக்கிலும்
Students note books Nos 1 2 3 4 5 டஜன் கணக்கிலும் விற்கப்படும்.
விலை ஜாபிதா விலாசம் தெரிவிப்பவர்களுக்கு அனுப்பப்படும்.

6 பவுன் மட்ட பேப்பர்
ரூல் போட்டது & இரட்டை ரூல்
6 பவுன் கல்கத்தா பேப்பர்
ரூல் போட்டது & இரட்டை ரூல்
8 பவுன் கல்கத்தா பேப்பர்
ரூல் போட்டது & இரட்டை ரூல்
ரூல் போடாதது ...
ரூலும் மார்ஜினும் ...
ஒரு பக்கம் ரூல் ...
ரூலும் கலர் அட்டையும்

ஒரு பக்ககம் ரூலும் கலர் அட்டையும்
9 பவுன் கல்கத்தா பேப்பர்
ரூல் போட்டது
ரூலும் மார்ஜினும்
10 பவுன் கல்கத்தா பேப்பர்
ரூல் போட்டது & இரஸ்டை ரூல்
ரூலும் மார்ஜினும் ...
ஒரு பக்கம் ரூல்ட் ...
ரூலும் கலிகோ அட்டையும்
ஒரு-பக்கம் ரூலும் மார்ஜினும்
கலிகோ அட்டையும்

### STUDENTS' NOTE BOOKS

8. Pounds Ruled & Mathematics
,, Unruled Margin
,, Unruled
,, One Side Ruled
,, One Side Ruled

10. Pounds Ruled & Mathematics
,, Unruled
,, One Side Ruled
,, Ruled & Margin

## அகில இந்தியா

### ஆசிரியர்கள் அஷ்யூரன்ஸ் ஸொஸைடி, லிமிடெட்

### சென்னை.

ஆசிரியர்களால், ஆசிரியர்களின் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்டது.

உங்கள் வயோதிகத்தில் உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் நீங்கள் என்ன சேமித்து வைத்திருக்கிறீர்கள்?

உடனே ஏஜன்ஸி நிபந்தனைகளுக்கும் மற்ற விபரங்களுக்கும் எழுதவும்.

**தலைமை ஆபீஸ்:—**

94/95, புதுத்தெரு, மண்ணடி, ஜி. டி. மதராஸ்.



வருடச் சந்தா ரூ. 1. மலர் 5. இதழ் 4. [அக்டோபர் 1937

# ஆரம்பக்கல்வி
## ELEMENTARY EDUCATION

"ஆரம்பக் கல்வி"யின் முன்னேற்றத்திற்காக உழைக்கும் ஓர் மாதாந்திரப் பத்திரிகை.

EDITOR.
P. VEERARAGHAVAN (Member, Madras District Educational Council)


"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.


27 FEB 1938


## வார்தா கல்வித் திட்டம்.

—0—

மகாத்மா காந்தியின் வார்தா கல்வித் திட்டத்தின் அடிப்படையான அபிப்பிராய மென்னவெனின் நமது நாட்டில் ஆரம்பப் பாடசாலைகள் அரசாங்க பொருளுதவியை எதிர்பாராமல், பாடசாலைச் சிறுவர்களால் செய்யப்படும் கைத்தொழில் பொருள்களைக் கொண்டு விற்றுவரும் ஊதியத்தினால் பாடசாலைகளை நடத்தப்படவேண்டுமென்பது. இந்த அபிப்பிராயம் நன்றாகத்தான் காணப்படுகின்றது. ஆனால் இது அனுபவத்தில் எவ்வளவு சாத்தியமென்பது யோசிக்க வேண்டியதாயிருக்கிறது. ஒன்று முதல் ஐந்தாவது வகுப்பு வரையிலுள்ள மாணவர்கள் தக்கிளியாலும் சர்க்காவினாலும் பஞ்சிலிருந்து நூலை நூற்று துணி நெய்து விற்றுவரும் ஊதியத்தைக் கொண்டு ஆசிரியர்கள் தமது குடும்பத்தைப் பாதுகாக்க முடியுமா வென்பது ஒவ்வொருவரும் யோசிக்க வேண்டியதாகும். இத்தகைய நூற்க சாமர்த்தியம் வாய்ந்த பிள்ளைகள் 5-வது வகுப்பில் தானிருக்கக் கூடும். நமது இராஜதானியில் 5-வது வகுப்பு வரையிலுள்ள பாடசாலைகள் மிகக்குறைவு; 5-வது வாசிக்கும் பிள்ளைகளும் மிகக் குறைவு. ஆதலின் 5-வது வகுப்பு பிள்ளைகளைக்கொண்டு நூல் நூற்றுவரும் ஊதியத்தைக்கொண்டு ஒரு பாடசாலையை நடத்துவது அனுபவ சாத்தியமன்று. இந்த அபிப்பிராயத்தைப் பல அறிஞர்கள் பல அறிக்கைகளில் வெளியிட்டிருக்கிறார்கள்.

வேண்டுமானால் உயர்தர ஆரம்பப்பாடசாலைகளிலும் (Higher Elementary Schools) செகண்டரி பாடசாலைகளிலும், உயர்தர பாடசாலைகளிலும் நூல் நூற்றல், நெய்தல், மரச்சாமான்கள், இவைகளைப்போன்ற பல கைத்தொழில்களைப் புகுத்தலாம். ஓரளவு 12-வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளால் செய்யப்படும் சாமான்களைக் கொண்டு விற்பதால் கொஞ்சம்

ஊதியம் கிடைக்கலாம். ஆனால் இந்த ஊதியத்தைக் கொண்டு ஆசிரியர்களுக்கு முழுதும் சம்பளம் கொடுக்கமுடியாது.

எல்லா பாடசாலைகளும் அரசாங்கத்தின் பொருளுதவி இல்லாவிட்டால் ஒருபோதும் நம் நாட்டில் நடைபெறாது. இதர நாடுகள் கல்விக்காக செலவிடும் பணத்தை நோக்குமிடத்து நமது நாட்டில் செலவாகும் பணம் பத்தில் ஒரு பங்குகூட கிடையாது. தற்போது நமது நாட்டிலுள்ள ஆரம்ப ஆசிரியர்களெல்லோரும் அரசாங்கக் கிராண்ட் தொகையைக் கொண்டுதான் ஜீவனம் செய்துக் கொண்டு வருகின்றனர். அரசாங்கத்தார் ஆசியர்களுக்குக் கிராண்ட் கொடுக்காவிடில் ஆசிரியர்களின் கதி அதோ கதிதான். ஆதலின் இந்த வார்தா திட்டத்தில் ஆரம்பக்கல்வி எவ்விதத்திலும் அபிவிருத்தியாகுமென்பதற்குத் தகுந்த வழிகள் காணப்படவில்லை. ஒரு சமயம் மகாத்மா காந்தி கொண்டு வந்த திட்டம் போராவலுடன் சில காங்கிரஸ் மந்திரிகள் தமது இராஜதானியில் புகுத்த எண்ணினால் முதல் முதலில் இத்திட்டத்தை சில ஜில்லாக்களில் உயர்தர பாடசாலைகளில் புகுத்தி பரீட்சை செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

## எ. யி. வெங்கடேச ஐயரின் சொற்பொழிவு.

நமது இராஜதானியில் ஆரம்பக் கல்விச் சட்டமேற்பட்டு சுமார் 17-வருஷங்களாயின. எந்த அபிப்பிராயத்தை முன்னிட்டு இச்சட்டமேற்பட்டதோ அந்த அபிப்பிராயம் நிறைவேறவில்லை. 1929-ம் வருஷம் சைமன் கமிஷன் வெளியிட்ட ஓர் கல்வி அறிக்கையில் பொதுஜன கல்விக்கென செலவழித்த பணம் நமது நாட்டில் லாபகரமாகச் செலவு செய்யப்படவில்லையென தெரிவித்திருக்கின்றது. ஆனால் கல்வியதிகாரிகள் அடிக்கடி ஆரம்பப் பாடசாலைகளில் பிள்ளைகளின் தேக்கமும் பணவிரயமும் அதிகமாகிறதென்றும் திறமையற்ற பாடசாலைகளென்றும் சொல்லி வருகின்றார்கள். இவர்கள் இவ்விதம் சொல்லி வருவது நமது நாட்டில் கல்வி பரப்புவதைத் தடுக்கும் முறையாகும். தேக்கமும், விரயமும் ஆரம்பப் பாடசாலைகளில் ஓரளவு இருக்கின்றதென்பது உண்மை. ஆனால் முக்கியமாகக் கல்வியபிவிருத்திச் செய்யும் வழிகளைக் கவனியாது தேக்கத்தைப் பற்றியும் விரயத்தைப் பற்றியும் பேசுவதில் பயனில்லை. கடந்த 6-வருஷங்களாக திறமையற்ற பாடசாலைகள் என்ற காரணத்தினால் பல பாடசாலைகள் மூடப்பட்டன. இவ்விதம் நாளுக்கு நாள் பாடசாலைகள் மூடப்படுவதனால் நமது ராஜதானியில் ஆரம்பக் கல்வி எவ்விதம் விருத்தியாகும்.

நமது ராஜதானியில் அநேக சிறு கிராமங்களில், பாடசாலைகளில் வாசிக்கும் பிள்ளைகள் வெகு சிலரே யிருந்துவருகின்றனர். ஒரு கிராமத்திலிருந்து மற்றோர் கிராமத்திற்குப் போக பல தடைகளிருக்கின்றன. பிள்ளைகளின் தாய் தந்தையர்களை வறுமை நோய் ஒரு புறம் வாட்டி வருகின்றது. இவைகளை யெல்லாம் கவனியாது பாடசாலைகளை மூடுவது பிரயோஜனமில்லை. மேற்குறித்த காரணங்களால் சில பிள்ளைகளின் தேக்கத்திற்கும், பணவிரயத்திற்கும் காரணமாயிருக்கலாம். இதை எவ்வாறு தடுக்கமுடியும். இதை காரணமாகக் கொண்டு பல பாடசாலைகளை மூடி விடுவதில் பிரயோஜனமில்லை.

## ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கும் விதம்.

———0———

தற்போது மலையாளம் ஜில்லாவில் ஆசிரியர்களுக்கு பாடசாலை மானேஜர்கள் ஒப்பந்தம் செய்துக் கொண்டபடி மாதாமாதமோ அல்லது 6-மாதத்திற் கொருமுறை கிராண்ட் வரும் பொழுதோ சம்பளம் கொடுக்காமையால் பல அனாவசியமான கிளர்ச்சிகளும், வேலை நிறுத்தங்களும், சண்டை சச்சரவுகளும் உண்டாகி வருகின்றன. நமது ஜில்லாக்களிலுங் கூட சில பாடசாலைகளில் இத்தகைய தகராறுகள் நடந்துவருகின்றன. அதை தவிர்க்க சில சுலபமான வழிகள் உண்டு. முக்கியமாக இத்தகைய தகராருகள் மிஷன் அல்லாத ஆசிரிய மானேஜர் பாடசாலைகளில் தான் அதிகமாக ஏற்படுகின்றன. ஆதலின் பிள்ளைகளின் சம்பளம் நன்றாக வசூலாகும் பாடசாலைகளில் மாதா மாதம் ஒப்பந்தத்தின்படி ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுத்து சம்பளப்பட்டியில் (Acquittance Roll) ஆசிரியரின் கையொப்பம் வாங்கி விடுவது மிகவும் உத்தமமானது. கொஞ்சம் சம்பளம் குறைவாக ஆகும் பாடசாலைகளில் 6-மாதத்திற் கொருமுறை கொடுப்பதாக ஒப்பந்தம் செய்து கொண்டு மாதா மாதம் எவ்வளவு கொடுக்க முடியுமோ அவ்வளவு கொடுத்துக்கொண்டே வந்து பாக்கித் தொகையை 6-மாதத்திற் கொருமுறை வரும் அட்வான்ஸ் கிராண்ட் வாங்கும்பொழுது பாக்கியை பைசல் செய்து ஆசிரியர்களின் கையொப்பத்தைச் சம்பளப்பட்டியில் வாங்கி விடுவது நலம். அட்வான்ஸ் கிராண்ட் இல்லாமலும் சம்பளமும் வசூலாகாத பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கு வருடத்திற் கொருமுறை சம்பளம் கொடுப்பதாக ஒப்பந்தம் செய்துக் கொண்டு, மார்ச், ஏப்ரல் மாதங்களில் வரும் வருடாந்திர கிராண்டைக் கொண்டு ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுத்து சம்பளப்பட்டியில் கையெழுப்பம் வாங்கி விடுவது மிகவும் நல்லது. இதைப்பற்றிய ஓர் சுற்றறிக்கை சென்னை டிவிஷனல் இன்ஸ்பெக்டர் திரு ஜி. எல். லோபோ அவர்கள் விடுத்திருக்கின்றார், அதன் சாரம் சம் கீழ் வருமாறு:—

மிஷன் அல்லாத எய்டட் ஆரம்பப்பாடசாலைகளில் அதிலும் ஆசிரிய மானேஜர்கள் பாடசாலைகளில் மாதா மாதம் ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்க வற்புறுத்த முடியாது. ஆனால் எல்லாபாடசாலைகளிலும் சம்பளப்பட்டியல் புத்தகம் வைத்திருக்க வேண்டியதவசியம். மானேஜர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தத்தின்படி மாதா மாதமோ, 6-மாதத்திற் கொருமுறையோ அல்லது கிராண்ட் வரும்பொழுதோ சேர வேண்டிய பணத்தைக் கொடுத்து கையொப்பம் வாங்க வேண்டிய தவசியமாகும். அப்படி யில்லாமல் ஒப்பந்தத்தின்படி பணம் கொடுக்காமலோ, ஒழுங்காக சம்பளப் பட்டியல் வைக்காமலோ அல்லது ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்காமலோ இருக்கும் பாடசாலைகளில் அங்கீகாரத்தை ரத்து செய்ய பரீக்ஷாதிகாரிகள் சிபார்சு செய்யலாமென தெரிவித்திருக்கின்றார்.

"In the case of nonmission Elementary Schools especially in teacher manager's schools regular monthly payment of salaries connot be insisted upon. But in any case acquittance roll must be maintained in all schools, acquittance being taken when salaries are paid according to agreement between the manager andthe teacher either monthly, half yearly or annually as soon as teaching grant is received. But in cases where the manager of a school has failed to act according to the agreement and to maintain proper acquittance roll and where he evades payment of salaries to teachers, the inspeeting officer may recommend the withdrawal of aid from the school."

G. L. LOBO.
Divisional Inspector of Schools
South Range. Madras.

## ஸ்ரீமான் வார்க்கியின் பிரசங்கம்.

சென்னை ஜில்லா உதவி ஆரம்பப்பாடசாலை மானேஜர்கள் சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டம் நேற்று மாலை சிந்தாதிரிப்பேட்டை ஸ்ரீ ராமலிங்கஸ்வாமி உயர்தர ஆரம்பப்பள்ளிக்கூடத்தில் ஸ்ரீமான் ஜி. நாராயணஸ்வாமி செட்டியாரின் தலைமையில் நடைபெற்றது. கல்விஇலாகா பார்லிமெண்டரி காரியதரிசியான ஸ்ரீமான் சி. ஜே. வார்க்கி "இம்மாகாணத்தின் உயர்தர ஆரம்பப் பள்ளிக்கூடங்களின் எதிர்காலம்" என்பதைப் பற்றிப் பேசினார்.

ஸ்ரீமான் ஏ. ஸி. பாலசுந்தரம் நாயகர் ஸ்ரீமான் வார்க்கியை வரவேற்கையில் இப்போதுள்ள உயர்தர ஆரம்பப் பள்ளிக்கூடங்களை எடுத்துவிடக் கூடாதென்று வற்புறுத்தினார்.

## ஸ்ரீமான் வார்க்கி.

பேசியதாவது:— மாகாணம் முழுவதும்



190352

ஒரே முறையான கல்வித்திட்டத்தை அமுல் நடத்துவதே சிறந்தது. இப்பொழுது பொது மக்கள் உயர்தர ஆரம்பப் பள்ளிக்கூடங்களைக் கண்டித்து வருகிறார்கள். இவைகளில் பெரும்பாலானவற்றை நடுத்தரப் பள்ளிக்கூடங்களாக மாற்றிவிடலாம்.

காந்திஜியின் திட்டத்தைப் பற்றியவரையில் அதைப் பரீட்சை செய்து பார்க்கவேண்டியது அவசியமாயின், ஏதாவது ஒரு இடத்தில் பரீட்சித்துப் பார்க்கப்படும். இதுவரையில் கட்டாயக் கல்வியை ஐந்துவருஷ காலத்திற்குத்தான் அளிக்க வேண்டிய அவசியமிருக்குமென எண்ணி வந்தோம். ஆனால் இப்பொழுது காந்திஜீ ஏழுவருஷ காலத்திற்குக் கட்டாய இலவசக் கல்வியை வழங்க வேண்டுமென வற்புறுத்துகிறார். இந்தக் காலத்தை வரையறையிராமல் அதிகரித்துக் கொண்டே போகலாம். ஆனால் ஐந்து வருஷத்திற்கு மேல் இதை அமுல் நடத்த முடியுமென எனக்குத் தோன்றவில்லை.

கல்வித்திட்டம் தன்னைத்தான் தாங்கிக் கொள்ளுவதாக இருக்கவேண்டுமெனக் காந்திஜீ விரும்புகிறார். காந்திஜீயின் ராஜீய தத்துவங்கள் உறுதியுடையவையாக விருக்கின்றன. ஆனால் கல்வித் துறையில் அவர் வகுக்கும் திட்டங்கள் அவ்வளவு நம்பிக்கையை யூட்டுபவையாக இல்லை.

குழந்தைகளுக்குக் கைத்தொழில் பயிர்ச்சியளித்து அவர்கள் தயாரிக்கும் சாமான்களை விற்று அதன் மூலமாகக் கிடைக்கும் வருமானத்தைக் கல்வித்திட்டச் செலவிற்காக வைத்துக் கொள்ளப்பட வேண்டுமென உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. ஐந்து வயது முதல் பத்து வயது வரையுள்ள குழந்தைகளுக்கு என்ன தொழில்களைக் கற்றுக்கொடுக்கமுடியும்? காங்கிரஸ் கொடிகளைத் தயாரிக்கலாம். இம்மாகாணத்தில் எல்லா வீடுகளிலும் காங்கிரஸ் கொடிகள் பறந்தாலும் இந்தக்கிராக்கி ஓரிரண்டு வருஷங்களுக்குமேல் இருக்காது. பிறகு குழந்தைகள் காற்றாடிகளைத் தயாரிக்கலாம். இதற்கு எவ்வளவு தூரம் கிராக்கி ஏற்படும்? இச்சிறுகுழந்தைகளுக்கு நாற்காலிகள், பெஞ்சுகள் செய்யும் பொறுப்பான வேலையைக் கொடுக்கமுடியாது. எனவே குழந்தைகளின் பத்து வயது வரையில் கல்வியைத் தன்னைத் தான் தாங்கிக் கொள்ளுவதாகச் செய்வதென்பது சாத்தியமில்லை. ஆரம்பக் கல்வியை பரப்ப வேண்டிய கடமை துரைத்தனத்தினுடையது ஆதலால், அதுதான் அதற்கான பணத்தைத் தேடித்தரவேண்டும்.

உபாத்தியாயர்களின் சம்பளத்தைக் குறைப்பதென்பதும் சாத்தியமானதல்ல. ஆசிரியர்கள் அனைவரும் பிரம்மசாரிகளாக இருந்தால் தான் இது முடியும். ஆண் குழந்தைகளும் பெண் குழந்தைகளும் ஒன்று சேர்ந்து படிப்பது, ஒரே பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்களையும் நியமிப்பது இவற்றிலும் பல கஷ்டங்களிருக்கின்றன. நடுத்தரப் பள்ளிக்கூடங்கள் தனித் தனித்தானிருக்கவேண்டும். ஆரம்பப் பள்ளிகளில் படிக்கும் ஆண் குழந்தைகளுக்கு ஸ்திரீ ஆசிரியர்கள் கல்வி போதிப்பதால், குழந்தைகளின் ஆண்மைத்தனம் அழிந்துபோகும். நமது குழந்தைகளிடமும் தற்போது காணப்படும் துளி ஆண்மைத்தன்மைகூட மேற்படி முறையால் மறைந்துபோய்விடும்.

வாடகை முதலியவற்றிற்காக அதிக கிராண்டுகள் வேண்டுமென ஆசிரிய மானேஜர்கள் கோருவது சம்பந்தமாக அவர்கள் இன்னும் பலமாகக் கிளர்ச்சி செய்ய வேண்டுமெனக் கூறுகிறேன்.

உதவி பெறும் ஆரம்பப் பள்ளி மானேஜர்களின் மாகாணச் சங்கமொன்றை அமைக்கும் விஷயத்தில் முயற்சியெடுப்பதற்காகக் கமிட்டியொன்றை நியமிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

190352

# உதிர்ந்த மலர்கள்.

## ஆசிரியர்களே ஒன்றுபடுங்கள்.

“காங்கிரஸ் மந்திரிகள் சொல்லிவருவதையும் வார்தா திட்டத்தையும் பார்த்தால் சம்பளக் குறைவு தோன்றுவதென்றால் முதல் முதலில் ஆசிரியர்கள் தலையில்தான் வந்துவிடியும் என்று தெரிகிறது. வார்தா திட்டம் அமுலுக்கு கொண்டு வரப்பட்டால் ஆசிரியர்கள் சம்பளத்தில் மண் விழுந்து விடும் என்பதில் சந்தேகமேயில்லை.

இப்பொழுது ஆசிரியர்களின் நிலைமை மிக மோசமாகிக் கொண்டுவருகிறது. அழுதப் பிள்ளைதான் பால் குடிக்கும். உங்கள் நிலையைக் காப்பாற்றப்பட வேண்டுமானால், உங்களது சுவதந்திரம் நிலைக்கப்படவேண்டுமானால் ஆசிரியர்களாகிய நீங்கள் ஒன்றுபட்டு கிளர்ச்சி செய்யவேண்டும். ஆசிரியத் தொழிலைக் குறித்து சர்க்காருக்கு கடுகத்தனையாவது கவலை கிடையாது, எல்லா உத்தியோகஸ்தர்களின் நிலைமையைக் காப்பாற்ற, உயர்த்த முன் வந்திருக்கும் சர்க்கார் ஆசிரியர்களை மட்டும் விலகியிருப்பதிலிருந்து சர்க்காரின் மனப்பான்மை எத்தகையது என்பது விளங்காதா? ஆசிரியர்கள் இனிமேல் முதலாளிகளின் கையை பார்த்துதான் ஜீவிக்கவேண்டும்.

கொடுத்தல், வாங்குதல் என்ற கொள்கைப்படிதான் ஆசிரியர்களின் சம்பளங்கள் ‘கண்ட்ரோல்’ செய்யப்படும் என ‘இரக்கமற்ற’ ஒரு கல்வியிலாகா டைரக்டர் சொன்ன சொல் ஒரு நாளும் மறக்க முடியாது.

தங்களை நியமனம் செய்த முதலாளிகள் வெவ்வேறு அபிப்பிராய முடையவர்களாயிருக்கலாம். ஆனால், ஆசிரியர்கள் எல்லாம் ஒன்று கூடி தங்களுடைய நலனைக் காப்பாற்றிக் கொள்ள ஒற்றுமையாக இருந்து தங்கள் குறைகளை எடுத்து காட்டவேண்டும்.” விடுதலை.

ஆர். பார்த்தசாரதி அய்யங்கார்
சிதம்பரம்.

ஜஸ்டிஸ் ஸர் அப்துல் ரஹ்மான் கல்வி வாரத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில், இந்தியாவின் செல்வ நிலை சரியாகவில்லையென்ற காரணத்தால் ஆரம்பப்பாடசாலைகளின் உபாத்தியாயர்கள் உயர்தரப் படிப்புள்ளவர்களாகத் தேர்ந்தெடுக்கப் படுவதில்லையெனச் சிலர் குறை கூறுகிறார்களென்றும், உபாத்தியாயர்களைப் பொறுக்கியெடுப்பதில் பணச்செலவைப்பற்றிமாத்திரம் கவனிப்பதுதவறென்றும் ஆங்கிலபாஷை மூலம் பாடங்களைக் கற்பிப்பதால் பிரயோசன மேற்படாதென்றும், தாய் பாஷை மூலம் கல்வி கற்பதே மேலென்றும் கூறினார்.

ஸ்ரீமான் எஸ். ஸத்தியமூர்த்தி பிறகு பேசியதன் சாரமாவது;—ஸ்வராஜ்ய லக்ஷியத்துக்கடுத்தபடி பொதுஜன கல்வி அபிவிருத்தியே எனது லக்ஷியம். இந்தியாவின் புராதன நாகரீகத்தைக் கண்டு இன்னும் உலகம் ஆச்சரியப்படுகிறது. ஆனால், இன்றைய நிலைமை என்ன! தேசமெங்கும் படிப்பின்மை அதிகரித்து நிற்கிறது

பிரசங்க மூலமாகக்கூட பாமரமக்களுக்கு நீங்கள் அறிவுண்டாகப் பிரயத்தனப் படலாம். கிராமங்களிலிருக்கும் வயதுவந்த மக்களுக்குத் தேசசரித்திரம், பூகோள சாஸ்திரம், அரசியல் நிர்வாகம் முதலிய விஷயங்களைப் போதிக்க வேண்டும் நாடகங்களாலும் ஸினிமாக்களாலும் சமூக பரிசுத்தத்தையும் தேக சுத்தத்தின் அவசியத்தையும் போதிக்கலாம். வயது வந்தவர்களுக்குக் கல்வி யறிவளிக்க ஆண்களைப் பழக்குவதன்றி முக்கியமான நமது பெண்மணிகளுக்குப் போதிக்க ஸ்திரீ தொண்டர்களைப் பழக்கவேண்டும். குழந்தைகளின் படிப்பில் பெற்றோர்களும் சிரத்தை யெடுத்துக் கொள்ளவேண்டும். ரூ. 50-க்கு குறைந்து சம்பளம் வாங்குபவர்களுடைய குழந்தைகளுக்கு இனமாகக் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். பணக்காரர்

கள் இதர வரிகள் செலுத்துவதோடு கூட ஏழைக் குழந்தைகள் படிக்கவும் பணஉதவி செய்யவேண்டும்.

### சர்க்கார் உதவி.

வார்தாவில் கல்வி அபிவிருத்தித் திட்ட மேற்படுத்துவதுபற்றி விவாதிக்கப் பட்டுவருகிறது. மகாத்மாகாந்தி தயாரிக்கும் திட்டம் தேசமக்களுக்கு நன்மை பயக்கக் கூடியதாகவிருக்குமென்பது நிச்சயம். ஆனால் ஆரம்பக் கல்விக்குண்டான செலவுக்கு அதிலிருந்தே பணம் கிடைக்கும்படி செய்வதில் சரியாவென்பதில் எனக்குச் சந்தேகமுண்டு. குழந்தைகளுக்குக் கல்வி புகட்ட அரசாங்கம்தான் உதவவேண்டுமென்பது எனது அபிப்பிராயம்.

உபாத்தியாயர்கள் நிலைமையை அபிவிருத்தி செய்வது சர்க்கார் கடமை. உபாத்தியாயர்களுக்குத் தகுந்த சம்பளம் கிடைக்குமாறும் இதரவசதிகள் ஏற்படுமாறும் செய்ய வேண்டும்.

* * *

கல்விக் கோஷ்டியைச் சேர்ந்த மிஸ்டர் ஹாங்கின் பிறகு கல்விப் பொருட் காட்சியைப் பற்றிப் பேசினார். கல்வி முறை இங்கிலாந்தில் மாறுதலடைந்து வருகிறதென்றும், கல்விப் பொருள்களைக்கொண்டே இங்கிலாந்தில் கல்வி கற்பிக்கப் படுகிறதென்றும், இங்கிலாந்தில் ஒரு குழந்தை 14 வயதில் தனது ஆரம்பப்படிப்பை முடித்துக் கொள்ளுகிற தென்றும் பரீக்ஷைகளெதுவும் வைக்கப்படுவதில்லை யென்றும், மேல்படிப்புக்குத்தான் பரீக்ஷைஉண்டென்றும், கல்விப் பொருட்காட்சியை அனைவரும்பார்வையிட்டு அதிலிருக்கும் குணங்களை கிரகித்து இந்தியாவின் பழக்க வழக்கங்களுக்குத் தகுந்தவாறு அமைத்துக் கொள்ள வேண்டுமென்றும் கூறினார்.

### மிஸ்டர் ஸால்டர் டேவிஸ்.

மேற்படி கோஷ்டியைச் சேர்ந்த மிஸ்டர் எர்னஸ்ட் ஸால்டர் டேவிஸ் பிறகு இங்கிலாந்தில் கல்வி சீர்திருத்தத்தைப் பற்றிப் பேசினார். சென்ற 10 வருஷகாலங்களில் இங்கிலாந்தில் கல்வியில் அதிக மாறுதல்களேற்பட்டிருக்கின்றன வென்றும் ஆரம்பக்கல்வி இருபிரிவாகப் பிரிக்கப் பட்டிருக்கிற தென்றும், 9-வயதிலிருந்து 11-வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குஒரு விதக்கல்வியும், அதற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு மற்றோர் விதக்கல்வியும் கற்பிக்கப் படுகிறதென்றும், தேகப்பயிற்சி கல்வி முக்கியமாகக் கவனிக்கப் படுகிறதென்றும் இங்கிலாந்தில் கைத்தொழிலபிவிருத்தி அதிகமாக ஏற்பட்டிருந்தாலும் அதைவிட விவசாயமே இங்கிலாந்தில் அதிகமென்றும், ஆகவே குழந்தைகளுக்கு விவசாயமும் கற்பிக்கப் படுகிறதென்றும், அவர் கூறினார். புதிய கல்விமுறையால் தற்காலம் இங்கிலாந்திலுள்ள குழந்தைகள் குதூகலமாகவும், சுறுசுறுப்பாகவும் வேலை செய்கிறார்களென்றும், பள்ளிக்கூடத்துக்குச் சந்தோஷத்துடன் வருகிறார்களென்றும் தெரிவித்தார்.

## கலம்பகம்.

காலஞ் சென்ற ஸ்ரீமான் வி. ஓ. சிதம்பரம் பிள்ளை தினத்தைக் கொண்டாடுவதை முன்னிட்டு திருநெல்வேலி நகரசபைக் காரியாலயத்தையும், பள்ளிக்கூடங்களையும் மூடலாமென்று சர்க்கார் அனுமதித் திருப்பதை முன்னிட்டு இன்று பள்ளிக்கூடங்களும், நகரசபை காரியாலயமும் மூடப்பட்டன.

### தென் ராமநாதபுரம் ஜில்லா போர்டு தீர்மானங்கள்.

ஸ்ரீமான் வேலுசாமி நாடார் போர்டின் நிர்வாகத்திலுள்ள ஒவ்வொரு பள்ளிக்கூடத்துக்கும் ஒரு மகாத்மா காந்திஜீயின் உருவப்படத்தையும், பாரதி பாடல் புத்தகத்தின் பிரதியொன்றையும் கொடுக்க வேண்டுமென்று கொண்டு வந்த தீர்மானம் நிறைவேறியது. ராஜகுமார் பி. ராஜாராம்பாண்டியன் போர்டின் நிர்வாகத்திலுள்ள எல்லா பள்ளிக்கூடங்களிலும் வந்தேமாதரம் பாட்டை பிரார்த்தனைப் பாடமாக பள்ளிக்கூட ஆரம்பத்திற்கு முன்



வைத்துக் கொள்ள வேண்டுமென்றும், ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் மூவர்ணக் கொடி பறக்க விட வேண்டுமென்றும் ஓர் தீர்மானத்தைக் கொண்டுவந்தார். இதுவும் நிறைவேறியது.

### சென்னை மாகாண ஆரம்பப்பாடசாலை மானேஜர்கள் சங்கம்.

1937-ம் வரு நவம்பர்மாதம் 9-ம் தேதி திவான் பஹதூர் ஜி. நாராயணசாமி செட்டியார், C. I. E. அவர்கள் தலைமையில் சென்னையில் நடந்த, சென்னை ஜில்லா ஆரம்பப்பாடசாலை மானேஜர்கள் சங்கக் கூட்டத்தில், சென்னை மாகாண ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள் சங்கம் ஏற்படுத்த வேண்டுமென்றும் அதற்காக கீழ்க்கண்ட அங்கத்தினர்கள் அடங்கிய கமிட்டி ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இந்தக் கமிட்டிக்குத்தலைவர் திரு. A. C. பலசுந்திர நாயகர் B. A., L. T., தலைவராகவும், ஆரம்பக் கல்வி பத்திராதிபர் திரு. P. வீரராகவன் அவர்கள் காரியதரிசியாகவும் நியமிக்கப்பட்டார். இந்தக் கமிட்டிக்கு மாகாண சங்கத்தை ஸ்தாபிக்க :இன்னும் பல அங்கத்தினர்களைச் சேர்த்துக்கொள்ள அதிகாரம் கொடுக்கப்பட்டது

அங்கத்தினர்கள்.

1. திரு. A. C. பாலசுந்திர நாயகர் B.A.L.T. (President) Member District Educational Council, Madras.
2. திரு. C. D. நாயகம் Ex. M. L. C.
3. திரு. M, A. நித்தியாநந்த முதலியார். Member District Educational Counci, Madras.
4. திரு. A. R. சேஷாசலம், [Member District Educational Council Madras.]
5. திரு. S. பார்த்தசாரதி நாயுடு.
6. திரு. L. நடராஜ சர்மா, B. A. L. T.
7. திரு. P. வீரராகவன்; [Editer Ele., Education & Member District Educational Council Madras,] Secretary.
8. திரு. H. ஹென்றி தேவதாஸ், (Member District Educational Council Chengulpet.
9. திரு. C. S. A. நாராயண ஐயர், Kalpatti, Palghat.

இன்னும் இதர ஜில்லாக்களிலிருந்து அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்து சேர்த்துக் கொள்ளப்படும்.

—0—

# Fort St. George Gazette

SEPTEMBER 1937.

No. 370.—Mr. H. F. Saunders, Officiat- ing Inspector of European schools, to act as Director of Public Instruction, and commis- sioner for Government Examinations, Madras, vice Mr. R. M. Statham on leave.

M. R. Ry. N. Rama Row. Avargal has been elected by the District Educational council, South Kanara to be its Vice President.

Miss. E. D. Chockammal has been elected by the District Ednecational Council, chengleput, to be its Vice-president.

—o—

### POSTINGS.

K. Muhammad Sahib Bahadur, District Educational officer, Coimbatore and Nilgiris and officiating District Educational officer,

Malabar, to officiate as District Educational Officer, Chengleput.

Ghulam Dastaghir Sahib Bahadur. District Educational officer, Tinnevelly, and Officiating District Educationalofficer, Chingleput. to officiate as District Educational Officer, South Kanara.

M. R.Ry. C. V. Govindan Nambiar Avargal, Officiating Personal Assistant to the Director of public Instruction, on relief to officiate as District Educational Officer Malabar.

[This cancels the posting of M. R. Ry. C. V. Govindan Nambiyar Avargal as officiating Dirtrict Educational, Officer South Kanara, ordered in proceeding R. O. C. No. 2460 C/37, dated 2nd September 1937.]

TRANSFERS.

Mrs. M. Varugis, Inspectress of Girls' Schools, VI Circle, Calicut, to officiate as Inspectress of Girls' Schools, III Circle Madras.

Miss. B. Amirthammal, Superintendet,n Government Secondary and Training School for women, Coimbatore, and Officiating Inspectress of Girls' Schools, III Circle Madras, to officiate as Inspectress of Girls' Schools, IV Circle, Madura.

Mrs. G. Sankunni, Headmistress, Gnvernment Secondary and Training School for Women, Vellore, and Officiating Inspectress of Girls' Schools, IV Circle, Madura to officiate asInspectress of Girls' Schools, VI Circle, Calicut.

No. 385.—M. R. Ry. K. Thirumalai Thathachariar Avargal has been elected by the District Educational Council Trichinopoly to be its Vice President.

No. 386.—M. R. Ry. A. Visvanatha Iyer Avargal has been elected by the District Educational Council, Trichinopoly to be its President.

No. 392.—the Reverend Father S. Arulswami, s. j., has been elected by the District Educational Council, Tinnevelly, to be its Vice-President.

No. 393.—M. R. Ry. A. E. Vankatesa Iyer Avargal and M. R. Ry. N. Varadiah Avargal have been elected to be members of the District Educational Council, Salem, by the association of Teacher-Managers of elementary schools in the Salem district.

Shaik Dawood Sahib Bahadur, Officiating District Educational Officer, on leave to officiate as District Educational Officer Chinglepet.

2. He is premitted to return to duty on.or after 28th September 1937.

## சங்கக் காரியதரிசிகளுக்கு ஓர் வேண்டுகோள்.

சங்க நிகழ்ச்சிக் குறிப்புக்களை எழுதியனுப்பும்பொழுது சுருக்கமாகவும், முக்கிய நிகழ்ச்சிகள், தீர்மானங்கள் மாத்திரம் எழுதியனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம். ஆசிரியர்கள் சங்கங்களுக்கு மாத்திரம் நமது பத்திரிகையை தவறாமல் அனுப்பிக்கொண்டு வருகின்றோம். புதுவருட சந்தா அநேக சங்கக் காரியதரிசிகள் இன்னும் அனுப்பிவைக்காமலிருக்கின்றனர். முன்போல் இரண்டு மாதத்திற்கு ஒரு பத்திரிகையும், 3-மாதத்திற்கு ஒரு பத்திரிகையாக சில காரணங்களினால் அனுப்பி வந்தது போலல்லாமல், தற்போது சற்று தாமதமானாலுங்கூட, ஒவ்வொரு மாதத்திற்கும் ஒவ்வொரு பத்திரிகை அனுப்புவதென தீர்மானித்திருக்கிறோம். தயவு செய்து சங்கக் காரியதரிசிகள் உடனே புதுவருட சந்தாவை சீக்கிரம் அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்,



# உலகப் போக்கு.

## இறந்தவர் பிழைக்கிறார்

இறந்தவர்களைப் பிழைப்பிக்கும் முறை உலகத்துக்குப் புதிதன்று. சில மருந்துகளைச் செலுத்துவதன் மூலம் துடி துடிப்பு அடங்கிய இருதயம் தன் வேலையைச் செய்ய ஆரம்பித்தது. இதனால் இறந்த உடலுக்கு மீண்டும் உயிர் திரும்பியது: இப்போது வேறொருமுறை கையாளப் படுகிறது: அதனால் வெகு சீக்கிரத்தில் உயிர் திரும்பி விடுகிறதாம்; ஒருவன் இறந்த உடனே அவனது இருதயத்தை ஓர் ஊசியால் குத்துதல் வேண்டும், குத்தினவுடனே இருதயத்துள் மின்சாரம் செலுத்தப்படுகிறது: மின்சாரம் சென்றவுடனே ஓர் அதிர்ச்சி உண்டாகிறது அவ்வதிர்ச்சியால் இருதயம் மீண்டும் தன்வேலையைச் செய்ய ஆரம்பிக்கிறது. அதனால் இறந்தவன் மீண்டும் எழுகின்றான்.

## இடியிலிருந்து மின்சாரம்

ஆகாயத்தில் மேகங்கள் சூழ்ந்திருக்கும் காலத்தில் இடிகள் உண்டாவதை நாம் காண்கிறோம் அந்த இடிகள் ஏன் உண்டாகின்றன வென்பதை நாம் எப்போதாவது நினைத்துப்பார்த்ததுண்டா? இல்லையென்றே கூறிவிடலாம். இத்தாலியிலுள்ளவர் சும்மா யிருக்கவில்லை. அவர்கள் இடிகளால் எவ்வளவோ மின்சாரம் வீணாகப் போவதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஒரு பெரிய மேகத்தில் உண்டாகும் இடியால் வீணாகப்போகும் மின்சாரம் ஒரு பெரிய தேசத்துக்கு ஒரு வருஷத்துக்கு போதுமாம். அதனால் வீணாகப்போகும் அந்த மின்சாரத்தைச் சேகரிக்க இதாலியார் இப்பொழுது முயன்று வருகிறார்கள். அதைச்சேகரிப்பது எப்படி? வானளாவ இரண்டு கம்பங்கள் நடப்பட்டிருக்கின்றனவாம். அக்கம்பங்களிலிருந்து வேறு சில இயந்திரங்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன; மேகங்களிலுள்ள மின்சாரம் இக்கம்பங்களின் மூலமாக இறங்குமாம். இம்மின்சாரத்தின் உதவியால் பெரிய தொழிற்சாலைகளை யெல்லாம் நடத்தக் கூடுமென்று அவர்கள் கூறுகிறார்கள்.

## மனக்கவலைக்கு ஆப்ரேஷன்

'நீ எப்போதும் மனக் கவலையுடன் இருக்கிறாயா? எப்போதும் மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டே யிருக்கிறதா? அப்படியானால் மூளையை ஆப்ரேஷன் செய்துகொள்' என்று அமெரிக்க விஞ்ஞானி ஒருவர் கூறுகிறார்; இந்த ஆப்ரேஷனைப் பற்றிச் சிறிது தெரிந்துக் கொள்ள வேண்டாமா? மூளையில் பல பாகங்கள் இருக்கின்றன. மனக்கவலை அதிகமாகும்போது மூளையில் ஒரு பாகம் கெட்டுப்போகிறது. அக்கெடுதல் தொத்துவியாதிக்குச் சமமாகும். அது பரவிக்கொண்டே போகும். அதனால் மூளையே கெட்டுவிடும். அவ்வாறு மூளை கெடாதமுன் ஆப்ரேஷன் செய்துகொள்வது நல்லது. ஆபரேஷனால் மூளையின் பாடமற்ற மூளையிலிருந்து அறுக்கப்படுகிறது. அதனால் மனக்கவலை அதிகமானால் ஒழிந்து விடுகிறது. இந்த ஆப்ரேஷனால் மூளையின் சக்தி மட்டும் சிறிது குறைகிறதாம். அமெரிக்காவில் இருபத்தொரு பேர் அந்த ஆப்ரேஷனை செய்துக்கொண்டனர். மூன்று பேர் சௌக்கியமாகி விட்டார்; மீதிபேர் சுகமடைந்து வருகிறார்: ஒருவர் மட்டும் இறந்துவிட்டார்.

தர்மம் செய்வதால் நீ அன்புள்ளவனாகி விடமாட்டாய். பெருந் தன்மையும் பரோபகார சிந்தையும் உன் உள்ளே கொழுந்து விட்டு எரிதல் வேண்டும்.

பாபத்துக்கு ஆளாகிறவன் மனிதன்; அதைக்கண்டு வருந்துகிறவன் யோகி; அதைப் பிரமாதமாகக் கொண்டாடுபவன் பிசாசு.

அழகே உண்மை; உண்மையே அழகு.

# இலவசக் கட்டாயக்கல்வி

## 7 வருஷத் திட்டத்துக்கு ஆதரவு.

### வார்தா மகா நாட்டுத் தீர்மானங்கள்.

வார்தாகஞ்ச அக் 23—வார்தாவில் 22, 23-ந் தேதிகளில் கூடிய தேசியமகாநாட்டுக்கு ஏராளமானபேர்கள் விஜயம் செய்திருந்தார்கள். மகாநாட்டுக்கு விஜயம் செய்து நடவடிக்கைகளில் கலந்து கொண்டவர்களில் பம்பாய் பிரதம மந்திரி கனம். பி.ஜி. கெர். சென்னைக் கல்வி மந்திரி கனம் சுப்பாராயன். கனம் எஸ் இராமநாதன், கனம் பியாரிலால் சர்மா, கனம் பண்டித ரவிசங்கர சுக்லா, கனம் விஸ்வநாததாஸ், கனம் டாக்டர் சையது முகமது, சர்தார் வல்லபாய் படேல், ராஜேந்திரபிரசாத், காகவேல்கர், ஆசிரியர் மக்காளி ஆசிரியர் கே. டி. ஷா; ஹம்ஸா மேதா, சௌதாமினி மேத்தா, காஆபென், காப்டன் சேவசர்மா, தாக்கர்பாபா முதலியவர்கள் முக்யஸ்தர்களாவர்.

மகாநாடு இரண்டுநாள் தீவிரமாக விவாதங்கள் நடத்தியது. இலவசக் கட்டாயக் கல்வியை 7 வருஷங்களில் பூர்த்தி செய்ய வேண்டுமென்றும் போதனைகள் செய்யத் தாய் பாஷையைத்தான் உபயோகப்படுத்த வேண்டுமென்றும் காந்திஜீ கல்வி சம்பந்தமாகக் கூறிய யோசனையை மகாநாடு ஆதரிப்பதாகவும் மேற்கண்ட காலவரையில் சங்கீத போதனை பயிற்சி சாதகமாயிருக்கும்படி கல்வியின் முறையிருக்க வேண்டுமென்றும் இம்மாதிரி கல்விமுறை ஆசிரியர்களுக்கு ஊதியத்துக்குச் சவுகரியமாயிருக்குமென எதிர் பார்ப்பதாகவும் தீர்மானங்கள் நிறைவேறின.

மேற்கண்ட தீர்மானத்திற்கு அனுசரணையாக ஆரம்பக்கல்வி பாட முறையை அமைக்கக் கீழ்க் கண்டவர்களைக் கொண்ட ஒரு கமிட்டி நிறுவப்பட்டது:— டாக்டர் ஸாஹீர்ஹுஸேன் (தலைவர்) ஆர்நாயகம் (கன்வீனர்) கவாஜா குலாம் ஸையுதின் ஸ்ரீமான்கள் கலேல்கார் கிருஷ்ணதாஸ், ஜாஜுஜி ஜே. ஸி. குமாரப்பா கிஷோர்லாலா பாம்மாஷ்ருவாலா ஆசிரியர் கே டி ஷா ஸ்ரீமதி அஷர் தேவி.

இக்கமிட்டி ஒருமாதத்திற்குள் மகாத்மா காந்தியிடம் ஒரு யாதாஸ்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.

மகாநாட்டுக்கு விஜயம் செய்தவர்கள் எல்லோரும் சேத் ஜம்னலால் பஜாஜின் விருந்தினராயிருந்தார்கள். ஜம்னலால்ஜீ மகாநாட்டுக்கு விசேஷ ஏற்பாடுகளைச் செய்திருந்தார்—யுபி.

---

# சென்னை அரசாங்க ஊழியர் சம்பளம்

## ஊழியர் தொகையும் மொத்தச் சம்பளமும்.

### அரசாங்கப் புள்ளி விவரங்கள்

சென்னை மாகாணத்தில் பலவகைப்பட்ட அரசாங்க உத்தியோகங்களை வகிப்பவர் தொகையும் அவர்களுக்குச் செலவழிக்கப்படும் பணமும் விளம்பர இலாகா மந்திரியால் அறிவிக்கப்பட்டுள்ளன. விவரம் வருமாறு:

| | ஸ்தானம் | செலவு லக்ஷம் |
|---|---|---|
| ஐ. ஸி. எஸ் | 162 | 28.69 |
| அகில இந்திய உத்தியோக வர்க்கம் (ஐ. ஸி. எஸ். தவிர) | 261 | 38.68 |
| மாகாண உத்தியோகஸ்தர் | 1,414 | 101.74 |
| மற்ற ஊழிய வர்க்கம் கிராமஉத்தியோகஸ்தர் உட்பட | 2,04,162 | 550.82 |
| பென்ஷன் வகை | | 92.53 |
| மொத்தம் | 2,05,099 | 812.46 |

---

மூளக்குகளும், சங்கீதமும், நாட்டியமும் நாடக மேடையை அலங்கரிக்கின்றன. அம்மாதிரியே கவிதையும் வாழ்க்கையை அலங்கரிக்கின்றது ஆ! கவிதையின் இன்பம் என்னே!



# ஆரம்பக் கல்வி அபிப்பிராயங்கள்.

"ஓர் மாணவன் ஒரே வகுப்பில் பல வருடம் தங்காமலிருப்பதற்கு கண்காணிப்போரின் தொகை அதிகமாகஇருக்க வேண்டும். பொது நலமும், சேவை எண்ணமும், தியாக புத்தியும் உள்ள கண்காணிப்போர் நமக்கு அவசியம்" என்பார் REV. MILTON G. KUOLT

பொது நலமும், சேவை எண்ணமும் தியாக புத்தியும் இல்லாமல் வஞ்சலாவண்யம் ஒன்றையே பெரியதாயெண்ணி ஆர்ப்பாட்டங்கள் புரிவோரையும், உண்மை உழைப்பாளிகளையும் வஞ்சப்பேய் பிடித்த கங்காணிகள் வெருட்டி உருட்டி மிரட்டி ஊக்கங் குலைப்பதையும் ஒழித்தவர்களாயிருத்தல் நன்றும். அப்படிப்பட்டவர்களையும் புற்றி அறிவிப்போர் சொற்ப சம்பள முள்ளோராயிருப்பது பற்றி அதனை ஏற்றுக் கொள்ள பெரிய கண்காணிகள் ஒருப்படாத நிலைமைக்கு என் செய்வது? இந்நிலைமையில் ஆரம்பக் கல்வி விருத்தியாவுதெங்ஙனம்? முதல் வகுப்புக்குப் பெண் ஆசிரியர்களால் அதிக நன்மை விளையும் என்பது போல் ஆரம்பக் கல்வியையும் ஆரம்ப ஆசிரியரையும் கண்காணிப்போர் பெண் கங்காணிகளாயிருப்பின் அதிகப் பயன் ஆரம்பக் கல்விக்கு விளைவிக்குமன்றோ! ஊக்கமுள்ள ஆசிரியரை மேன் மேலும் ஊக்குவிப்போர் ஆண் கண்காணிகளைவிடப் பெண் கண்காணிகள் இயற்கை நலம் பொருந்தியவர்கள் அன்றோ!

கண்காணிப்போரின் ஸ்தலத்துக்குச் சமீபத்தில் நடக்கும் பாடசாலைகளை விட அதிக தூரத்தில் கண்காணிப் போரின் கவலையேயில்லாத இஷ்டம்போல் இருந்துவரும் பாடசாலைகளைக் கவனிக்க எண்ணமில்லாத சிரமங் கொண்ட கண்காணிப் போரால் ஆரம்பக்கல்வி எவ்வளவு தூரம் விருத்தியாகும்?

மற்றும், ஆசிரியனது பொறுப்பையுணர்ந்த மனப்பான்மையுடன் பேசுபவர் வெகு சிலரே? என்று கூறுவர் REV. MILTON G. KUOLT அவர்கள். ஆசிரியத் தொழிலை, கேவலம் தன்வயிற்றுப் பிழைப்பிற்காகச் செய்ததாக (ஆசிரியர்) எண்ணுதல், ஆசிரியரிடத்துக் காணும் பெருங்குற்றம் என்று அன்னார் கூறுகிறார்கள். இவற்றில் முன்னுக்குப் பின் முரண்படுகின்றமையை அவர் அறியாமற் போனமை வருந்தத் தக்கது. இதர உத்தியோகஸ்தர்களில் எத்தனை பேர் ஜீவனத்துக்காக என்று இல்லாமல் வேலை செய்யலாம் இவர் குடும்பஸ்தரல்ல, சந்நியாசி. ஆசிரியர்களோ சந்நியாசிகளல்ல, குடும்பஸ்தர்கள் ஆவார்கள். சந்நியாசியாகிய இவரும் கேவலம் தன் வயிற்றுப்பசியை வெறுக்க முடியாதவராகும். இவரது வயிற்றுப் பசிக்கு இவருக்கும் ஏதாவது ஆகாரம் வேண்டியிருக்கின்றது இவர் ஒருவரது ஆகாரத்துக்குத் தேவையான பொருளாவது குடும்பத்தையுடைய ஆசிரியர் ஒருவருக்குக் கிடைக்கின்றதா? இவர் இதனை நினைத்துப் பார்த்திருந்தால் இவ்விதம் கூறமாட்டார். இதனை ஆசிரியரும் ஆசிரியமானேஜர்களும் ஏனையோரும் யோசித்துப் பார்க்கட்டும். இவர் வயிற்றுப் பிழைப்பிற்காகச் சந்நியாசியாகாமல் தமது மத விருத்திக்காகச் சந்நியாசி ஆகியுள்ளார்; அதற்கும் பொருளுதவி வேண்டியிருக்கின்றது. குடும்பத்தையுடைய ஆசிரியருக்குப் பொருளாதாரத்தின் அவசியம் எத்தகையது என்பதை யோசித்துப் பார்க்காமல் கூறுவது விசனிக்கத் தக்கதே. இவரது வயிற்றின் ஆகாரம் ஒரு சிறிது குறைவுபடினும் இவர் தமது கடமையைச் சரிவரச் செய்ய இயலுமா? இயலுமெனின் எத்தனை நாளைக்கு இயலும்? ஆசிரியரும் அத்தகையரல்லரோ! இத்தகைய நிலைமையில் ஆரம்பக்கல்வி முழுப்பயனையும் அளிக்கக்கூடியதாகுமா என்பனத அவரும் அவரைச் சேர்ந்தோரும், ஆரம்பக் கல்வி அபிவிருத்திக்குப் பாடுபடுவதாகக் கூடும் பட்டேபட்டே ஆசாமிகளும் தத்தம் மனச்சாட்சியைக் கேட்டுப்பார்க்கட்டும்.

# ஆபீஸ்களில் சயன அறை தேவை!

## நகர வாழ்வா? நரக வாழ்வா? மாரடைப்பின் காரணமென்ன?

கவிராஜேந்திரநாதர், எம்.எஸ்.ஸி. அவர்கள் அமெரிக்க டாக்டர்கள் கூறுவதாக எழுதுவதாவது ;—

மாரடைப்பு நோய் இப்பொழுது எங்கணும் பரவிவிட்டது. சில வருஷங்களுக்கு முன்பு அந்நோய் அமெரிக்காவில் தான் அதிகம். ஆனால் இப்பொழுதோ நம்முடன் கலந்துறவாடிக் கொண்டிருக்கும்பொழுதே ஒருவர் மாரடைபபால் மரணமடைகிறார். இதற்குக் காரணம் என்ன? அது பற்றி ஆராய்வோம்.

### நோய்வளர்க்கும் செவிலிகள்.

ஆயுர்வேத நிபுணரான சாரகர் என்ன சொல்லுகிறார்? புலனைந்தும் சரியான முறையில் நிறுத்தப்பட்டுப் பொறியைந்தினையும் உபயோகியாமையே காரணமென்று அவர் கூறுகிறார். நமக்கு ஐம்பொறிகள் உள. அவை மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன ஐம்புலன்களாவன சப்த, ஸ்பரிச, ரூப, ரஸ, கந்தம் என்று சொல்லப்படுவன.

பொறி, புலன்களைச் சரியான வழியில் உபயோகிக்க நாம் தவறி விடுகிறோம். அதுவே நோய்க்குக்காரணமாய் விடுகிறது. நவீன நாகரிக உலகில் இக்கோலத்தைக் காணலாகும். ஆகவே நாகரிகம் முதிர்ந்துள்ள நகரங்களே நோய் வளர்க்கும் செவிலிகளாயிலங்குகின்றன. நம் புலன்கள் நகரங்களிலே ஓய்வு என்பதையே அறியா? புலன்களை நாம் இயற்கைக்குமாறான வழியில் உபயோகிக்கிறோம். உதாரணமாகக் கள் கொள்ளிவாய்ப் பிசாசுகளென ஓடிவரும் டிராம் வண்டிகளின் சப்தம் ஒரு பால்; 'மேதினியில் சென்றிடுக' வென்ற இயமன் மேற்கு நாட்டவர் மூலம் அனுப்பிய மோட்டார் யமன்களின் கூச்சல் ஒரு பால்; தொழிற்சாலைகளின் தலைவேதனையும், டண்டம் விற்போரின் இரைச்சலும் ஒரு பால்; கிராமபோன்களின் ஓயாத ஓலம் ஒரு பால்; அம்மம்மா! இவ்விரைச்சல்களிடையே செவிப்புலனுக்கு ஓய்வென்பது தான் உண்டோ!

### பால் குடிக்கும் பல் வீழ்வதன்முன் மூக்குக் கண்ணாடி

கட்புலனுக்கு நகரமென்னும் நரகில் ஏற்படும் ஊறு எங்குமில்லை. நரகத்தில் யமதூதர் கண்ணைப் பிடுங்குவர் என்று சொல்வதுண்டு. நகரத்தில் நாகரிகத்தின் கோலம் பலர் கண்ணைப்பிடுங்கி விடுகிறது, மின்சார விளக்கொளியும், மற்றவையும் கண்ணைக் கெடுக்கின்றன. பால் குடிக்கும் பல்விழாத சிறுவர்களும் மூக்குக்கண்ணாடி மாட்டிக் கொண்டு விடுகின்றார்கள். மாணவர்கள் குத்துவிளக்கு வெளிச்சத்தில் படிப்பதில்லை. குத்துவிளக்கு வெளிச்சம் கண் புலனுக்குக் கெடுதி செய்யாது. அதிகப் பொருட் செலவுமில்லை சினிமாக் கொட்டகையில் ஒரே இருட்டு. இருட்டில் படம் பார்க்கிறோம். வெளியே வந்தால் கண்ணைப் பறிக்கும் வெளிச்சம். இவ்வித (அ)நாகரிகக் கோலத்தில் மூழ்கிக் கண்ணைப் பறிகொடுத்தோம்; கொடுக்கிறோம்.

அந்தோ! இயற்கைக் காட்சிகளைக் கண்டு ஆனந்திப்போர் இந்த நாகரிக வாழ்வை விரும்புவரா? மலைக்காட்சியும், நதிக் காட்சியும், வயற்காட்சியும் கண்டு அந்த அமைதிவெளியில் ஆனந்த முறுவோர்க்கு நகர வாழ்வு நரக வாழ்வேயாம்.

### நரகக்குழி

சத்தற்ற உணவும், கலப்படமான பொருள் வகைகளும் ஆரோக்கியத்தை அழிக்கின்றன. கிராமங்களிலே அருந்தும் பாலும் நகரங்களிலே கிடைக்கும் பாலும் சுவையில் எவ்வளவோ வேறுபடுகின்றன. காய் கறிகளும் அவ்விதமே. இவ்வாறாக நாம் நமது பொறிபுலன்களைக் கெடுத்துக் கொள்கிறோம்.



சாரக ஸம்ஹிதையில் ஒரு கதையும் சொல்லப்பட்டுள்ளது. நகரவாழ்வு நரகமொப்பதென்பதை அக்கதை மூலம் சாரகர் தெரிவிக்கிறார்.

நகர வாழ்வில் நாளுக்கு நாள் தீமைகள் மலிந்தன; இன்று நகரம் நரகக் குழியாய் விட்டது. இரத்தக் கொதிப்பு மாரடைப்பு, மெனிஞ்ஜிடிஸ், முதலிய நோய்களுக்கு நகரமாந்தர் இரையாகின்றனர்.

### ஓய்வு வேண்டும்

மனிதனுக்கு நோய் பெருகப்போக இருதயமே பாதிக்கப்படும் இளமையில் ஏற்படும் நோய்களால் இருதயம் வலுவற்றதாகும் வாலிபமுறுக்கில் அந்த பலவீனந் தெரியாது. விருத்தாப்பிய தசையில் திடீரென்று இருதயம் அடைத்துப் போகும் ஆதலினால் ஒவ்வொருவருக்கும் ஓய்வு வேண்டுவது அவசியமாகும்.

உடலிலுள்ள உறுப்புக்களில் இருதயம் ஒன்றினுக்கே ஓய்வு கிடையாது. தூங்கும்பொழுது தான் அதற்குச் சிறிது ஓய்வு கிடைக்கிறது. ஆகவே இருதய நோய் அல்லது மாரடைப்பு வியாதியைத் தடுத்தல் வேண்டுமானால் இருதயத்துக்கு ஓய்வு அளித்தல் அவசியம்.

### பண்டை வழக்கம்

முன் காலத்தில் நமது பெரியோர்கள் போதிய ஓய்வு எடுத்துக்கொண்டிருந்தார்கள். அதனால் அவர்கள்! நோய் வாய்ப்படாது. நெடு நாள் வாழ்ந்தார்கள். காலையிலும் மாலையிலும் உழைத்து நடுப்பகலில் ஓய்வு எடுத்துக்கொள்வது வழக்கம். அதுவே நமது உஷ்ண தேசத்துக்கு ஏற்றமுறை.

ஆனால் இப்பொழுது ஒருவன் முன்னுக்கு வரவேண்டுமானால் நாள்முழுதும் உழைக்க வேண்டியிருக்கிறது. ஓய்வு எங்கே?

அந்தோ! அந்த இருதயம் என் செய்யும்! அதற்கு ஓய்வு எது? ஆழ்ந்த நித்திரையே தேவை! நகரவாழ்வில் ஆழ்ந்த நித்திரையேது? சாப்பிட்ட பின் நமது பெரியோர் ஓய்வு எடுத்துக் கொள்வது வழக்கம். இந்நாளில் சாப்பிட்ட பின் யார் ஓய்வு எடுத்துக்கொள்ள முடிகிறது. சாப்பிட்டதும் ஆபீஸுக்கு ஓடவேண்டியிருக்கிறது, வயிறுபிழைக்க வேண்டுமே! சாப்பிட்டதும் ஓய்வு எடுத்துக்கொண்டால் இருதயம் நிதானமாக வேலை செய்யும் உடல் உறுபுக்களுக்கு வேண்டிய இரத்தத்தை அளிக்கும்.

### தூங்கக் கிளர்ச்சி செய்க

இப்பொழுது அமெரிக்க டாக்டர்கள் என்ன சொல்கிறார்கள்? ஆபீஸில் ஒரு சயன அறை ஏற்படுத்தச் சொல்கிறார்கள், மத்தியானம் சாப்பிட்டதும் சிறிது நேரம் தூங்க வேண்டுகின்றார்கள். அது சோம்பேரித்தனமாகாது.

ஆகவே இப்பொழுது எல்லாரும் ஒரு பெரிய கிளர்ச்சி செய்ய வேண்டும். அதாவது போஜனத்துக்குப் பிறகு சிறிது நேரம் உடலுக்கும் மனத்துக்கும் ஓய்வு வேண்டுமென்பதே. தூங்குவதே ஓய்வளிப்பதாகும்.

கிராமத்துக்குப் போங்கள்; இயற்கைக் காட்சியில் ஈடுபடுங்கள்; ஆனந்தமாயிருங்கள்; ஆரோக்கியமாயிருப்பீர்கள்.

### ஒரே மருந்து

ஒரே ஒரு விஷயம் சொல்லி முடித்து விடுகிறேன். யாருக்காவது இரத்தக் கொதிப்போ இருதய நோயோ ஏற்படும் போலிருந்தால் பால் சாப்பிடுங்கள். 'சடாமூலி'யையும் சேர்த்துக் காய்ச்சிச் சாப்பிடுங்கள். உடம்புக்கு நல்லது. சாப்பாட்டில் தேன் சேர்த்துக் கொள்வது பண்டை வழக்கம். அதைத் திரும்பவும் கையாள்வது சிறப்பே.

—"அம்ரித பஜார்"

# மலையாள ஆசிரிய மானேஜர்கள் மகாநாடு.

இந்த மகாநாடு செப்டம்பர் 31ந் தேதி மலையாள ஜில்லாக் கல்விச் சபைத் தலைவர் திரு. P. K. குண்ணி சங்கர மேனன் தலைமையில் கொயிலாண்டி டென்னுமிடத்தில் கூடியது. மலையாள ஆசிரிய மானேஜர்களின் சங்கக் காரியதரிசி திரு. K. S. இராமசாமி ஐயர் அங்கத்தினர்களை வரவேற்றுப் பேசியதின் சாராம்சம் கீழ்வருமாறு:—

"தற்போதுள்ள கல்வியிலாகா சட்டதிட்டத்தின்படி பாடசாலையைத் திறமையாக நடத்தும் பொறுப்பு மானேஜர்களுடையதே. ஒரு உபாத்தியாயரை வைக்கவோ, எடுக்கவோ மானேஜருக்குத் தான் சர்வ அதிகாரமுண்டு. கல்வி அதிகாரிகளோ, பொதுமக்களோ ஒரு பாடசாலை நிர்வாகத்தில் தலையிட எவ்வித உரிமையும் கிடையாது. மானேஜ்மெண்டால் யாராவது பாதிக்கப்பட்டால் கல்வியதிகாரிகளுக்குத் தெரிவித்துக்கொள்ளலாம். கல்வியிலாகா சட்ட திட்டங்களை ஒரு பாடசாலை மானேஜர் மீறி நடப்பாரானால் அவரைக் கண்டிக்க கல்வி இலாகா அதிகாரிகளிருக்கின்றனர். ஒரு ஆசிரியரை ஒப்பந்தத்தின்படி நடவாமல் திடீரென ஒரு பாடசாலையினின்று நீக்கினாலும் அல்லது சேரவேண்டிய சம்பளங்களைக் கொடுக்கவில்லையென்றாலும் விசாரணை செய்து தீர்மானிக்க நீதிஸ்தலங்களிருக்கின்றன. ஆனால் தற்போது ஆசிரியர்கள் சொற்படி சில கிராமத்தாரின் உதவியால் மானேஜரை நடக்கும்படிச் செய்வதும், பொது மக்களிடையே எய்டட் பாடசாலையைப் பற்றிப் பொய்ப் பிரசாரம் செய்வதும், சில பாடசாலைகளிலிருந்து பிள்ளைகளைத் திருத்தி நிற்கும்படிச் செய்வதும், அவர்களை வேறு பாடசாலைகளில் சேரும்படி செய்வதும், ஆரம்பக்கல்வியின் அபிவிருத்தியைத் தடுப்பதற்கு ஓர் முட்டுக் கட்டையாகும் பிள்ளைகளின் நல்ல மனதைக்கெடுப்பதாகும். ஆசிரிய மானேஜர்களைக் குறை கூறும் சிலர் ஆசிரிய மானேஜர்கள் இந்த நாட்டு மக்களெனவும் அவர்களும் நாட்டில் சுகமாக வாழ சுதந்தரமிருக்கின்றதென்டதை அவர்களறிய வேண்டும். இந்த ஜில்லாவிலுள்ள 4121 ஆரம்பப் பாடசாலைகளில் 2706 பாடசாலைகள் ஆசிரிய மானேஜர்களால் பரிபாலிக்கப் பட்டவை. ஜில்லாமுழுவதும் வாசிக்கும் 4, 22, 131 பிள்ளைகளில் 2,97,047 பிள்ளைகள் ஆசிரியமானேஜர்கள் பாடசாலைகளில் வாசிக்கின்றனர். எய்டட் பாடசாலைகளில் 2321 பாடசாலைகள் சொந்தக் கட்டடத்திலிருக்கின்றன. ஆனல் 1703 ஜில்லாபோர்டு பாடசாலைகளில 193 பாடசாலைகளுக்குத் தான் சொந்தக் கட்டடங்களிருக்கின்றன. 1193 போர்டு பாடசாலைகளில் 98353 பிள்ளைகள் வாசிக்கின்றார்கள். அதற்கு ஜில்லா போர்டார் 9,95,406 ரூபாய் செலவு செய்கின்றனர். அதாவது ஒரு குழந்தைக்கு 10 வீதம் செலவு செய்கின்றனர் 109 முனிசிபல் பாடசாலைகளில் 17,109 பிள்ளைகள் வாசிக்கின்றனர். அதற்கு ஒரு குழந்தைக்கு ரூபா 12 வீதம் 2,04022 ரூபாய் செலவு செய்கின்றனர். ஆனல் 2321 எய்டட் பாடசாலைகள் சராசரி ஒரு குழந்தைக்கு 5 ரூபா வீதம் சுருங்கிய செலவில் கல்வி கற்பித்து வருகின்றன. ஆதலின் எய்டட் பாடசாலைகள் சுருங்கிய செலவில் நாட்டில் பரப்பி வருகின்றது என்று கூறினர்.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறப் பட்டன.—

1. ஒரு பாடசாலையிலிருந்து மற்றொரு பாடசாலைக்குத் தக்க காரணங்களில்லாமல் பிள்ளைகளைச் சேர்க்கக் கூடாது.

2. ஒரு பாடசாலையில் நீக்கப்பட்ட ஆசிரியரை முன்பு வேலை செய்திருந்த மானேஜரிடமிருந்து தக்க யோக்கிய தாபத்திரம் கொண்டு வந்தாலொழிய இதர பாடசாலைகளில் சேர்க்கக் கூடாது.

3. ஒரு பாடசாலையிலிருந்து நீக்கப்பட்ட உபாத்தியாயர் போட்டியாக ஆரம்பித்து நடத்தும் பாடசாலைக்கு அங்கீகாரம் கொடுக்கக் கூடாது.

4 சில பிரமுகர்கள் ஆசிரியர்களுக்கும் மானேஜர்களுக்கும் ஏற்பட்டுவரும் சண்டை சச்சரவுகளில் அனாவசியமாகத் தலையிட்டுத் துவேஷமாக தலையிடுவதை இந்த மகாநாடு கண்டிக்கிறது.

5 ஆசிரியர்களல்லாத எய்டட் மானேஜர்களுக்குப் பிரதி நிதித்வம் ஜில்லாக் கல்விச் சபைகளில் கொடுக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறது.



# வார்தா கல்வி மகாநாட்டின் முடிவுகள்.

## மந்திரி பண்டித ஷுக்லா தலைமையில் கூடும் மகாநாட்டில் கவனிக்கப்படும்.

### கட்டாய தேகப்பயிற்சி வற்புறுத்தப்படும். பம்பாயில் டிசம்பரில் கல்வி மந்திரிகள் மீண்டும் கூடலாம்.

நாகபுரி அக் 25—

நவம்பர் மாதம் 6-ந்தேதி மந்திரி பண்டித ரவிசங்கர் ஷுக்லா கூட்டியிருக்கும் மகா நாட்டில் வார்தா கல்வி மஹாநாட்டின் முடிவுகள் ஆலோசிக்கப் படும். வித்யா இலாகாவைச் சார்ந்த 5 உத்தியோகஸ்தர்களும் வித்யா இலாகா அதிகாரியும் மந்திரியின் தலைமையில் அவரது அறையில் கூடுவார்கள்.

கட்டாய ஆரம்பக்கல்வி மந்திரி பண்டித ஷுக்லாவின் வித்தியா மந்திரத் திட்டம் ஆரம்பப் பள்ளிக்கூடங்களின் பாடங்களைத் திருத்துதல் பாடப்பகுதிகளையும் மாற்றி வைப்பது போன்ற பல முக்கிய பிரச்னைகள் கவனிக்கப்படும். ஹைஸ்கூல் ஸ்காலர்ஷிப் பரீக்ஷையை எடுத்துவிடுவதை இம்மஹாநாடு ஆலோசிக்கும். இப்பரீட்சைகளினால் பிரதிவருஷம் ரூ. 30000 வித்யா இலாகாவிற்குச் செலவு ஏற்படுகிறது. ஆகையால் இது வீண் எனக் கருதப்படுகிறது. இப்பரீட்சையை எடுத்துச் செலவைக்குறைப்பது மந்திரியின் உத்தேசம். மாகாணம் முழுவதிலும் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் கட்டாய தேகப்பயிற்சித் திட்டத்தை ஆரம்பிப்பதையும் இம்மஹாநாடு ஆலோசிக்கும்.

வார்தா கல்வி மகா நாட்டிற்கு வந்த கல்வி மந்திரிகள் யாவரும் டிசம்பர் மாதாரம்பத்தில் பம்பாயில் கூடி வார்தா மஹா நாட்டில் ஆரம்பப் பாடப்பகுதிகளைப் பற்றித் தீர்மானங்களை அனுசரித்து முடிவுகள் செய்ய ஏற்படுத்தப் பட்ட கமிட்டியின் யாதாஸ்தைக் கவனிப்பார்கள். இன்னும் ஒரு மாத காலத்திற்குள் அக்கமிட்டியின் யாதாஸ்து மஹாத்மா காந்திஜீயிடம் சமர்ப்பிக்கப் படவேண்டும். யாதாஸ்து வெளியாகிய பின்பு பம்பாயில் கூட்டம் கூடும்.

## ருஷியாவின் படிப்பினை

ருஷியாவை உதாரணமாகாக் கொள்ளுங்கள். இந்தியாவைப் போலவே படிப்பின்மையில் ஆழ்ந்திருந்த ருஷியா 10 வருஷங்களில் தனக்குக் கல்வியறிவு உண்டாக்கிக் கொண்டது. 5 வருஷங்களில் தனது கைத்தொழிலை அபிவிருத்தி செய்து கொண்டது மூன்று வருஷத்தில் விவசாயத்தை முன்னணிக்குக்கொண்டு வந்தது. ருஷியா மிகவும் சக்தி வாய்ந்ததாக விளங்குகிறது. ருஷ்யாவால் செய்யமுடிந்தது இந்தியாவுக்கு ஏன் சாத்யமாகாது? அது தான் எனது லட்சியம். அந்த லக்ஷியத்தைக் கைப்பிடித்துதான் நீங்கள் நடக்க வேண்டும். குடிசைத் தொழிலையும் கைத்தொழிலையும் பிரித்து ஒவ்வொன்றுக்கும் தகுந்த வசதிகளும் திட்டமுமேற்படுத்திச் சரியான முறையில் ஏராளமான பொருளுற்பத்தி செய்தால் தான் இந்தியா பொருளாதாரத் துறையில் அபிவிருத்தியடையுமென நான் நம்புகிறேன்.

அப்பா! சந்தோஷத்தின் சக்தி பிரமிக்கத்தக்கது.

எங்கே உன் பொக்கிஷமிருக்கிறதோ அங்கே உன் மனமும் செல்லும்.

பம்பாய் அரசாங்கம் காந்தி லண்டன் பிரயாண' முதலிய 26 படங்களின் மேலிருந்த தடையை நீக்கிவிட்டது.

# OFFICIAL NOTIFICATION.

## POSTINGS.

M. R. Ry. P. Bhadriah Garu, District Educational Officer, Vizagapatam, and Officiating Personal Assistant to the Director of Public Instruction, to officiate as Special Officer in the office of the Director of Public Instruction, Madras, for a period of two months from 15th August 1937.

M. R. Ry. K. I. Verghese Avargal, District Educational Officier, Nellore, and Officiating District Educational Officer, Salem, to officiate as Personal Assistant to the Director of Public Instruction, Madras.

## TRANSFER.

Mrs. R. S. Subbalakshmi Ammal, Permanant Headmistress Secondary Section, Lady Willingdon Training College, Madras and Officiating Superintendent, Government Secondary and Training School for Women, Rajahmundry, to revert to her permanent appointment as Headmistress, Secondary Section, Lady Willingdon Training College, Madras.

No. 323.—M. R. Ry. P. K. Pattabhirama Sastri Avargal, Deputy Inspector of Schools, to officiate as District Educational Officer, Salem, in the Madras Educational Service.

(With effect from the date of taking charge)

No. 336.—Miss E. S. Asirvatham, Headmistress, Government Middle School for Girls, Mayavaram, to act as Superintendent, Government Secondary and Training School for Women, Rajahmundry, in the Madras Educational Service.

(With effect from the date of taking charge.)

No. 338.—M. R. Ry. L. R. Ramachandra Ayyar Avargal, Assistant Professor of Sanskrit, Presidency College, Madras to act as Superintendent of Sanskrit Schools in the Madras Educational Service.

No. 340.—Under section 5 of the Madras Elementary Education Act, 1920 M.R. Ry. H. Devadoss Avargal, has been elected to be a member of the District Educational Council, Chingleput, by the District Teacher Managers' Association.

No. 334.—Under section 5 of the Madras Elementary Education Act, 1920 M. R. Ry. Pulavarti Bheemalingamurt, Garu has been elected by the District Educational Council, East Godavari, to be its Vice-President.

## LEAVE

No. 356.—Shaik Dawood Shaib Bahadur, District Educational Officer, North Arcot, leave on average pay without medical certificate for two months from the 12th August 1937.

No. 359.—Under section 5 of the Madras Elementary Education Act, 1920, Srimathi K. Ramasubbamma Garu has been elected by the District Educational Council Cv^d daph, to be its President.

---

## பைரன் கூறிய செம்மொழி

தேசாபிமானம், பாஷாபிமானம் இந்த இரண்டும் ஒவ்வொருவருக்கும் தேவை. பாஷாபிமானம் இல்லையானால், தேசாபிமானம் பயனுடையதாகாது. ஜப்பான் முதலிய தேசங்களை நோக்குங்கள். பாஷை உயர்வடையாவிடில், தேசமும் உயர்வடைவதில்லை. ஆங்கிலக் கவிஞர் பைரன் கூறியதுபோல் 'எவருக்குப் பாஷாபிமானம் இல்லையோ அவருக்குத் தேசாபிமானமும் இல்லை' என்பது உண்மையாகும். ஆகையால் உண்மையான தேசாபிமானிகள் எப்போதும் தாய் மொழியைப் புறக்கணிக்க மாட்டார்கள்.

## காந்தியடிகளும் ஏனையோரும்

தாய் மொழியைப் புறக்கணிக்க வேண்டுமென்று காந்தியடிகளும் அவர் வழி நிற்கும் பெரியோர்களும் உரைப்பதில்லை. சமீபத்தில், ஜவஹர்லால்நேரு அவர்களும் தமது அறிக்கையில் அவ்வாறு கூறவில்லை. அவர்கள் அனைவரும் மாகாண பாஷைகளின் நிலையைக் காத்து ஹிந்தி கற்பிக்கவேண்டுமென்ற கருத்து உடையவர்கள் ஆதலால், தமிழ் நாட்டுத் தலைவர்கள் அனைவரும் பொறுமையுடன் ஆராய்ந்து தமிழ் நாட்டைக் காப்பாற்ற வேண்டுகிறோம்; தமிழ் மொழியை முதலில் கட்டாய பாடமாக்க வேண்டுகிறோம்.

---

Printed & Published by P. Veeraragavan, 94-95, New St., G. T. Madras.

190352